1994 நவம்பர் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) கருங்காலி வகை மரங்கள். (பாதுகாப்பு) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1994). மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1994) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 8-11-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில் இந்தக் கருங்காலி இனத்தைச் சேர்ந்திருக்கின்ற மரங்கள் தான் அதிகமான முளைப்புத் தன்மையையும் வளர்ச்சித் தன்மையையும் கொண்டதாக இருக்கின்றன. குறிப்பாக நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள், இந்த மரத்தை வெட்டுவதற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதை விட தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய சந்தன மரங்கள் விலை உயர்ந்தவை. இந்தக் கருங்காலி மரங்கள் மட்டுமல்ல-இந்த இனத்தைச் சேர்ந்திருக்கின்ற மரங்களைப் போன்று பல மடங்கு விலை உயர்ந்திருப்பது சந்தன மரங்களின் விலை மதிப்பு. அதிகமான விலை மதிப்பு உள்ளது-ஆகவே இந்த மரத்தை வெட்டக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, மற்ற மரங்களை இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு வெட்டிக் கொண்டால் அதற்கு என்ன தடை இருக்கிறது என்பதைக் குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இது வழிவகுத்துக் காட்டக் கூடிய ஒரு சட்டமாக இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தில் தமிழ்நாட்டின் வனத் துறையில் இருக்கக்கூடிய மரங்களில், அரசாங்கத்தில் இருக்கக்கூடிய மரங்களில் விலை உயர்ந்த மரங்கள் என்னென்ன என்பதை அரசாங்கம் முதலிலே விளக்கமாகச் சொல்லி இருக்கவேண்டும். அதற்கான விளக்கங்களே இல்லை. மரத்தினுடைய இனத்தை மட்டும் சொல்லி, அதற்குத் தடை விதிக்கலாம் என்று சொன்னால், அனேகமாக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல மரங்களை வெட்டுவதற்கு ஒரு வழியை அரசாங்கம் வகுத்துக் காட்டுகிறது என்பதைத்தான் நான் இதிலே குறிப்பிடுகிறேன். ரோஸ்வுட் போன்றவை, (குறுக்கீடு) ஆனால் தமிழ்நாட்டில் இதுவரை விலை உயர்ந்த சந்தன மரங்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு வெட்டி அழிக்கப்பட்டதோடு, இன்னும் நம்முடைய வன மிருகங்களும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் தொடர்ந்து தேதிகளை நிர்ணயித்துக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைக் குறித்து அறிக்கை வைக்க

1994 நவம்பர் 9] [திரு. ஜி. பழனிசாமி]

வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். அது சம்பந்தமாக மாநில அரசு எத்தனை கோடி ரூபாயைச் செலவிட்டிருக்கிறது என்பதற்கு ஒரு அறிக்கையை வைத்து, அதைச் சட்டமன்றத்திலே விவாதமாக நடத்தவேண்டிய அளவுக்கு உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், சந்தன மரக் கடத்தலைத் தடுத்து அவர்களைப் பிடிக்கச் செல்லும் காவல் துறையினர் அங்கே படுகொலை செய்யப்படுகிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. வீரப்பனைப் பிடிப்பதற்குச் செல்கிற காவல் துறையினர் இன்றைக்கு . . . ...(குறுக்கீடு)

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இந்தச் சட்டமுன்வடிவு கருங்காலி மரம் பற்றியது.

திரு. ஜி. பழனிசாமி: கருங்காலி மரம் பற்றியதுதான். ஆனாலும், சந்தன மரத்தையும் வெட்டமாட்டார்களா என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கருங்காலி மரத்தை விட்டு விட்டு வீரப்பனைச் சொல்லி வேறு எங்கேயும் போய்க் கொண்டே இருக்க வேண்டாம்.

திரு. ஜி. பழனிசாமி: கருங்காலி மரங்கள் விலை உயர்ந்தது என்று தடை விதிக்கப்பட்டால், சந்தன மரத்திற்கும் ஆபத்து வருகிறது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன். இதுவரையிலும் சந்தன மரத்தை வெட்டிக் கொண்டிருந்தார்கள். கருங்காலி மரம் விலை உயர்ந்தது என்று தடை விதிக்கிறபோது, சந்தன மரத்திற்கு மரியாதை இன்னமும் கூடி இருக்கிறது. அதனாலே சந்தன மரம் இன்னும் வெட்டப்படும். அது வெட்டப்படுகிற காரணத்தினாலேதான் சொல்கிறேன். இன்றைக்கு வீரப்பனைப்பற்றி எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. தமிழ்நாடு காவல் துறை–சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கிறபோது, இன்றையதினம் காட்டிலே மறைந்து மரம் வெட்டக்கூடிய கொள்ளையர்களை காவல் துறையினர் சுட்டுத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். பல லட்சக் கணக்கான ரூபாய் உயிர் இழந்தவர்களுக்காக வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனக்கு என்ன சந்தேகம் இருக்கிறது என்று சொன்னால் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு துறையிலே வருவது. இது வனத் துறையிலே வருவது, வனத்தை பாதுகாக்க வேண்டும் என்கிற அளவு வரைக்கும்தான் அமைச்சர் அவர்களுடைய துறையில்

இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் அதுபற்றி எல்லாம் பேசினால், அது காவல் துறையில் வரக்கூடியது. காவல் துறையில் வருவது வனத் துறையில் வராது. (குறுக்கீடு) நீங்கள் கருங்காலி மரம் விலை உயர்ந்ததா, இல்லையா. அதில் மக்கள் நலம் குறித்த உங்களுடைய கருத்து எதுவோ அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்த மரம் வெட்டாமல் தடுப்பதால் உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்பதை நீங்கள் சொல்லிவிட்டால் சரியாக இருக்கும். இந்த மரம் வெட்டாமல் தடுக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய நோக்கம். இதை வெட்டாமல் தடுப்பதால், உங்களுக்கு ஏதாவது நேரடியாகப் பிரச்சினை இருந்தால், அதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீரப்பன் பற்றிய பிரச்சினைக்கு எல்லாம் போகும்போது, விரிவான விவாதம் அதில் நடப்பது நல்லதல்ல; பொது நன்மையைக் கருதியும் சொல்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி எங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் கிடையாது. வன வளத்தைப் பாதுகாக்க வேண்டும், மலை வளத்தைப் பாதுகாக்க வேண்டும். நில வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நீண்ட கோரிக்கையில் ஒரு நீண்ட பார்வையோடு எங்கள் கட்சியும் நாங்களும் இருக்கக்கூடியவர்கள். ஆகையினால்தான் சொல்கிறேன். குறிப்பாக இந்த கருங்காலி இனத்திற்கு மட்டும் சட்டம் கொண்டு வந்தால், பிற மரங்களையும் இதைச் சாக்காக வைத்து வெட்டி விடுவார்கள். எனவே, பிற மரங்களையும், விலை உயர்ந்த மரங்களையும் இதில் இணைக்க வேண்டும் ; இருக்கிற சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தமிழக அரசால் மிகச் சீராக ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, இது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மத்திய அரசும் இது குறித்து ஆய்வு செய்து, இந்திய ஜனாதிபதியினுடைய ஒப்புதல் பெற்று, இந்தச் சட்டம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த கருங்காலி மரம் சட்டத்தைக் குறித்து எந்தவிதமான

1994 நவம்பர் 9] [திரு. கு. லாரன்ஸ்]

ஆட்சேபணைகளும் அல்லது இந்த சட்டமுன்வடிவு குறித்து எந்தவிதமான ஆட்சேபணைகளும் அல்லது அதனுடைய செக்ஷன்ஸ் குறித்து எந்தவிதமான ஆட்சேபணைகளும் தெரிவிக்கவில்லை. ஆனால், அவர்கள் ஒரு அச்சத்தை வெளிப்படுத்தினார்கள். இதற்கு மட்டும்தான் ஏதோ இன்றைக்குச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு இருப்பது போன்று சொன்னார்கள். ஏற்கெனவே, சந்தன மரம் சம்பந்தமாக சட்டங்கள் இருக்கின்றன. அந்த மரம் வெட்டக் கூடாது என்பது மட்டுமல்ல, அந்த மரம் பல்வேறு கிராமங்களில் தனியாருடைய சொந்த நிலத்தில் இருந்தாலும்கூட, அந்த மரமே அரசுக்குச் சொந்தம் என்கிற அளவுக்கு இன்றைக்குச் சட்டம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பல்வேறு கிராமங்களில் தனியார் அந்த சந்தன மரத்தை வைத்து இருந்தாலும்கூட, அதை அரசுக்குத்தான் அவர்கள் வியாபாரம் செய்ய முடியுமே தவிர, அதை அவர்கள் எடுத்துச் செல்ல முடியாது. எனவே, ஏற்கெனவே உரிய சட்டங்கள் சந்தன மரம் சம்பந்தமாக இருக்கின்றன. இன்றைக்கு இந்தச் சூழ்நிலையில், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலி வகை மரங்கள் (பாதுகாப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 41/1994) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்டிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–50

6. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(உ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1994 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.